திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்சாரம் மிகவும் முக்கியமான ஒரு பிரச்னையாக இருக்கிறது, பகலிலே மின்சாரம் இருந்தால் இரவிலே இருப்பதில்லை. இரவிலே இருந்தால் பகலிலே இருப்ப தில்லை. எப்பொழுதும் மின்சாரத்தை தொடர்ச்சியாக தருவது இல்லை. இந்த நிலையில் நெய்வேலியில் இருக்கிற ரஷ்யன் டிசைன் நன்றாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். நேற்றுக்கூட போலியோ தடுப்பு மருந்துகளில் ரஷ்யன் மருந்து நன்றாக இருப்பதாக நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னார்கள். எனவே, நெய்வேலியில் இருக்கிற அந்த டிசைனைப் போலவே, ஒரு டிசைனைச் செய்து அதை தூத்துக்குடியில் அமைக்காததற்கு என்ன காரணம்? ஏனென் றால் அப்படிப்பட்ட நல்ல டிசைன்களை அமைக்காமல், மிக மோசமான டிசைன்களைப் பயன்படுத்துவதினால், தமிழகத்தில் மின்சாரம் பாதிக்கப்பட்டு, மின்சாரத் துறை அமைச்சர் மீது அபாண்டம் ஏற்படுகிற வகையில் கடுமையான நிலைமை ஏற்பட் டிருப்பதைத் தவிர்க்க அரசு என்ன பரிகாரம் காணப்போகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி நிறுவனத்தைப் பொறுத்த வரையில் அது ஆரம்பத்திலேயே ஒரு தனி திட்டமாக, ஆகிய செலவுகளெல்லாம் ரஷ்யன் உதவியோடு பெறப் பட்டு. இயங்கி வருகிறது. ஆகையினால் அதிலே விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டாலும் அதே முறையில்தான் மேற்கொள்வார்கள். ஆனால் தூத்துக்குடி அனல் மின் திட்டம் நாமே போட்டது. நம் ஊரிலேயே செய் யப்படுகிற பொருள்களை வாங்கி அதை அமைக்க முயற்சி செய் திருக்கிறோம். அதனால் இந்தக் குறைபாடுகள். நாமே நம் முடைய காரியங்களைச் செய்துக் கொள்கிறபோது ஏற்படுகிற சிரமம்தான் மின்சாரத் துறை அமைச்சருக்கும் இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

சின்னத்தரபுரம் அருகே பவர் ஹவுஸ்.

*வினா எண். 397—திரு. ப. செ .சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் சின்னத்தாராபுரம் அருகே ஒரு பவர் ஹவுஸ் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1981 மார்ச் 6]

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சின்னதாராபுரம் பகுதிக்கு பள்ளிப்பட்டு, கரூர் ஆகிய பகுதிகளில் இருக்கிற பவர் ஹவுசிலிருந்துதான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. அவை சரிவர சப்ளை செய்யப்படாத காரணத்தால், அங்கேயுள்ள தொழிலாளர்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, சின்னதாராபுரம் பகுதியில் ஒரு பவர் ஹவுஸ் கட்டும் திட்டத்தை அரசு மறு பரிசீலனை செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சின்னதாராபுரம் அருகே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதற்காக மின் தேவை வளர்ச்சி இப்பகுதிகளில் இருக்கிறதா என மின் வாரியத்தால் ஆராயப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட வளர்ச்சி இருந்தால், துணை மின் நிலையம் அமைப்பது அவசியமா என்று பார்த்து பிறகு அனுமதி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமசாமியாபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

*வினா எண். 398—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி இராமசாமியாபுரம் அரிசனக் குடியிருப்பில் 1980 ஜூன் இறுதி வாரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு என்ன நிவாரணம் அளித்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் அன்று காலை 11 மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டது. பாதிக் கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை 20.

(ஆ) முழுதும் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 17-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 200 வீதமும், பகுதி பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் 3-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 50 வீதமும் வழங்கப்பட்டது. மற்றும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசியும், 1/2 லிட்டர் மண்ணெண்ணெயும், ஒரு வேட்டியும் ஒரு புடவையும் வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS